(ஆ) அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, கே. டி. கே. தங்கமணி ஆகியோர் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறார்கள்.

“இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு மத்திய அரசு அறிவித்துள்ள 20 அம்ச திட்டத்தை சரிவர இந்த அரசு அமல் படுத்தத் தவறியதால் தமிழ்நாடு அமைச்சரவை மீது இப்பேரவை தனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.”

பேரவையின் விதி 55(2)-ன்படி, தீர்மானம் ஒப்புக் கொள்ளத்தக்கதாக இருக்குமாயின், அதைப் பேரவைக்கு நான் படித்துக்காட்டி, இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறியவேண்டும். இத்தீர்மானம் விதிகளுக்குட்பட்டு இருப்பதால், இத்தீர்மானத்தை நான் பேரவைக்குப் படித்துக் காட்டினேன். இப்போது பேரவை இத்தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

அதாவது, திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, கே. டி. கே. தங்கமணி ஆகியோர் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

இதற்கு அனுமதி வழங்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இடங்களில் எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(32 உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 32 மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து நிற்பதால் இத்தீர்மானத்திற்கு பேரவை அனுமதி அளித்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை என்றையதினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது என்பது பற்றி இன்று கூடும் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.